**சுருக்கம்**

பொது விநியோகத் திட்டம் – அரிசி – நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் அரிசியின் சில்லறை விலை – கிலோ ஒன்றிற்கு ரூ.1/– என்ற குறைந்த விலையில் விற்பனை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு (பி1) துறை**

அரசு ஆணை (நிலை) எண். 159 நாள் 05.09.2008

**படிக்க:**

அரசு ஆணை (நிலை) எண். 69 கூ.உ.(ம)நு.பா. துறை நாள் 13.05.2006

–––––

**ஆணை:**

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தற்போது கிலோ ஒன்றிற்கு ரூ.2.00 என்ற விலையில் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 12 கிலோ முதல் 20 கிலோ வரையில் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் மட்டும் குறைந்தபட்சம் 16 கிலோ அரிசியும் அதிகபட்சமாக 24 கிலோ அரிசியும் வழங்கப்பட்டுவருகிறது. அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் கீழ் (Antyodaya Anna Yojana) கிலோ ஒன்றிற்கு ரூ.2 விலையில் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் 35 கிலோ வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

2. ஏழை எளிய நடுத்தர குடும்பங்கள் பயனடையும் வகையில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படும் அரிசியின் விலையை குறைப்பது பற்றி இவ்வரசால் பரிசீலிக்கப்பட்டு, பொது விநியோகத் திட்டத்தில் நியாய விலைக் கடைகளில் தற்போதுள்ள கிலோ ஒன்றுக்கு ரூ.2.00 என்ற விலையை குறைத்து கிலோ ரூ.1/– (ரூபாய் ஒன்று மட்டும்) என்ற விலைக்கு விற்பனை செய்ய இவ்வரசு உத்திரவிடுகிறது. அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் குடும்பத்திற்கும் கிலோ ஒன்றிற்கு ரூ.1/– (ரூபாய் ஒன்று மட்டும்) என்ற விலையிலேயே பொது விநியோகக் கடைகளில் அரிசி விற்பனை செய்யப்படும். இந்த விலைக் குறைப்பினால் குடும்பங்களுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவில் எவ்வித மாற்றமும் இல்லை. இந்த விலைக் குறைப்பு 15.09.2008 முதல் அமலுக்கு வருகிறது. இந்த அரிசி விலைக் குறைப்பு மொத்த அனுமதியின் கீழ் வழங்கப்படும் அரிசிக்கும் பொருந்தும் எனவும் அரசு உத்தரவிடுகிறது. இந்த விலை குறைப்பால் ஏற்படும் வித்தியாச தொகையை சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களும், சுய உதவி குழுக்களும் 14.09.2008 அன்றைய கடைகளில் உள்ள இருப்பின் அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஈடுசெய்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறது. 15.09.2008 முதல் நியாய விலைக் கடைகளுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கும் விலை தற்போதுள்ள கிலோ ரூ.1.55 என்பதற்கு பதில் கிலோ ரூ. 0.55 என்ற அளவில் நுகர்பொருள் வாணிபக் கழகம் வசூலித்துக்கொள்ள

ஆணையிடப்படுகிறது. அரிசியின் சில்லறை விற்பனை விலையில் செய்துள்ள விலைக் குறைப்பு காரணமாக நியாய விலைக் கடைகளுக்கு வழங்கப்படும் சில்லறை விளிம்புத் தொகையில் (Retail Margin) எவ்வித மாற்றமும் இல்லை.

3. இப்புதிய விலையினை எல்லா நியாய விலைக் கடைகளிலும் உள்ள அறிவிப்புப் பலகைகளில் தெளிவாக பொது மக்களின் பார்வைக்கு தெரியும்படி எழுதி வைக்க தக்க உத்தரவுகள் பிறப்பிக்குமாறு, ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாவட்ட ஆட்சியாளர்களும் இவ்வாணையை பத்திரிக்கைச் செய்திக் குறிப்புகள் மூலமாக அந்தந்த மாவட்டங்களில் வெளியாகும் தினசரி நாளிதழ்களில் மற்றும் தொலைக்காட்சி / அகில இந்திய வானொலி மூலமாக பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டு செல்ல தக்க ஏற்பாடுகள் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

4. இவ்வாணையின் காரணமாக தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தேவைப்படும் கூடுதல் உணவு மானியத்திற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்ப தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இந்த அரசாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 2830/FS/P/08 நாள் 02.09.2008.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. சண்முகம்
அரசு செயலாளர்

பெறுநர்
ஆணையாளர்,
உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–5.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–10.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
மாவட்ட ஆட்சியாளர்கள் (சென்னையைத் தவிர)
துணை ஆணையாளர்கள், (சென்னை வடக்கு மற்றும் தெற்கு)
உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–7/18/35.
நிதித்துறை, சென்னை–9.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள்.
தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இகோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.